**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 59/2016**

**Prosecution witness : அ.சா.9** **Date : 23.09.2024**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. ) (Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது முதுநிலை வருவாய் ஆய்வாளராக மேட்டுர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் பணி புரிந்து வருகிறேன். என்னுடன் மேச்சேரி கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்த அர்த்தனாரி என்பவர் இறந்துபோய் விட்டார். அவருடைய ஈமகிரியத்திற்கு சென்று உள்ளேன். கடந்த 2015ம் வருடம் கிராம நிர்வாக அலுவலக மேச்சேரியில் வேலை செய்து வந்தேன். பணியில் இருந்தபோது கடந்த 01.05.2015 அன்று மேச்சேரி காவல் ஆய்வாளர் அழைத்ததன்பேரில் SMR பங்க்குக்கு நானும் கிராம உதவியாளரும் சென்றோம். காலை 5.50 மணிக்கு அங்கு 2 நபர்களை காவல் ஆய்வளார் விசாரித்து கொண்டிருந்தார். பின்னர் அவர்கள் பெயர், விலாசம் என்னவென்று கேட்டு தெரிந்து கொண்டோன். அவர்கள் இருவரும் ஊட்டி நடுக்கானி கூடலூர் பகுதியை சேர்த்தவர்கள் என்றும் அவருடைய பெயர் சங்கர் என்கிற ஞானசேகர் த.பெ.சிவாநாதன் என்றும் மற்றொருவர் பெயர் சௌந்தர்ராஜன் த.பெ.துரைசாமி என்றும் தெரிவித்தனர்.

2. காலை 6.00 மணி அளவில் சங்கர் என்கிற ஞானசேர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,

சௌந்தர்ராஜன், சிவா, கிருஷ்ணமூர்த்தி, இளையராஜா, சாதிக்பாட்ஷா, மற்றும் அதே பகுதியில் சொந்தமாக கார் வைத்து வாடகைக்கு ஓட்டி வரும் ரமேஷ்குமார் ஆகியோர் நண்பர் என்றும், அவ்வப்போது கேரளா சென்று மது அருந்தி வந்ததாகவும், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு திருப்பூர் பகுதியில் வேலை செய்து வரும் சுரேஷ்குமார் அவரது பெரியப்பா மகன் சுரேந்தர் ஆகியோரிடம் பழக்கம் ஏற்பட்டது எனவும், ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்போது சுரேஷ்குமார் மற்றும் சுரேந்தர் என்பவர்கள் தங்களுடன் திருப்பூரில் பணி புரிந்துவரும் ஆறுமுகம் என்பவரின் அக்கா சாந்தி என்பவர் மேச்சேரியில் குடியிருந்து வருவதாகவும், அவரது கணவர் சம்பத் என்பவர் வெளிநாட்டியில் பணி புரிந்தது மூலம் சம்பாதித்த ரூ.5 கோடி மற்றும் 10 கிலோ தங்க நகை அரசுக்கு கணக்கு காட்டாமல் வீட்டில் மறைத்து வைத்துள்ளதாகவும் அதனை திருடினால் நாம் அனைவரும் செட்டில் ஆகிவிடலாம் என்று தெரிவித்து, திருப்பூர் சென்ற பிறகு தாங்கள் அழைப்பதாகவும் தெரிவித்தனர் சென்றனர் என்றும்.

3. அதன்படி கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சுரேஷ்குமார் மற்றும் சுரேந்தர் ஆகியோர் அழைத்ததன் பேரில் சிவா மற்றும் இளையராஜா ஆகியோர் திருப்பூர் சென்றதாகவும் அப்போது சுரேஷ்குமார் மற்றும் சுரேந்தர் ஆகியோர் செந்தில் குமார் மற்றும் ஆறுமுகம் ஆகியோரை அறிமுகம் செய்து வைத்துள்ளார்கள் என்றும், அப்போது ஆறுமுகம் என்பவர் தனது அக்கா சாந்தி என்பவரின் கணவர் சம்பத் என்பவர் வெளிநாட்டியில் பணி புரிந்தது மூலம் சம்பாதித்த ரூ.5 கோடி மற்றும் 10 கிலோ தங்க நகை அரசுக்கு கணக்கு காட்டாமல் வீட்டில் மறைத்து வைத்துள்ளதாகவும் அதனை திருடுலாம் என தெரிவித்தார் என்றும், அதன் பின்னர் சிவா, இளையராஜா, ஆறுமுகம், சுரேஷ்குமார், சுரேந்தர் ஆகியோர் மேச்சேரில் குலாலர் தெருவில் உள்ள சாந்தி என்பவரின் வீட்டையும் அருகில் உள்ள போகும், வரும் வழிகளை பார்வையிட்டடு திரும்பினர் என்றும்

4. அதன் பிறகு கடந்த 25.04.2015 அன்று கொள்ளையடிக்க சுரேந்தர் என்பவர் திட்டமிட்டதாகவும் அப்போது இளையராஜா என்பவர் உடல்நிலை சரியில்லாத

காரணத்தினால் தன்னால் வர இயலாது என்றும் கொள்ளையடிப்பதில் தனக்கும் பங்கு தர வேண்டும் என தெரிவித்ததாகவும் அதற்கு ஒப்புகொண்டு சங்கர் என்கிற ஞானசேகர், சௌந்தர்ராஜன், சிவா, கிருஷ்ணமூர்த்தி, சாதிக்பாட்ஷா, சுரேந்தர் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர் ரமேஷ்குமாருக்கு சொந்தமான TN 10 S 6952 என்கிற Tata Sumo வாகனத்தில் கொள்ளையடிக்க மேச்சேரி குலாலர் தெரு பகுதிக்கு இரவு 9 மணி அளவில் சென்றதாகவும், இரவு 9.40 மணியளவில் சாந்தி என்பவர் வீட்டிற்குள் சங்கர் என்கிற ஞானசேகர், சௌந்தராஜன், சிவா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சென்றதாகவும், அப்போது சிவா என்பவர் தன்னுடன் கொண்டு சென்ற பையில் இருந்து சில பேப்பரை எடுத்து தாங்கள் Income tax–ல் இருந்து வருவதாகவும் நீங்கள் அரசுக்கு கணக்கு காட்டாமல் பணம் மற்றும் நகையை மறைத்து வைத்துள்ளதாக தெரிவித்ததாகவும், சாந்தி என்பவரிடம் உள்ள பணம் மற்றும் நகை எடுத்துவர சொல்லி மிரட்டியதாகவும் அப்போது சாந்தி என்பவர் எடுத்து கொடுத்த பணத்தை என்னி பார்த்தபோது ரூ.2,32,000/– இருந்ததாகவும், சாந்தி என்பவர் கொடுத்த பணம் மற்றும் நகையை ஒரு காகிதத்திலும், சாந்தி என்பவரிடம் இருந்து பெற்ற செல்போன்கள் மற்றும் அவரது மகனின் திருமண சான்றிதழை ஒரு துணி பையில் போட்டுக்கொண்டு, சாந்தி என்பவரின் வீட்டின் வெளிபுற கதவினை மூடிவிட்டு,

5. காரில் மேற்சொன்ன நான்கு நபர்கள் மற்றும் சாதிக்பாட்ஷா, சுரேந்தர், ரமேஷ்குமார் ஆகியோருடன் திருப்பூர் சென்று செந்தில்குமார் என்பவர் வீட்டில் இரவு தங்கிவிட்டு மறுநாள் காலை தலா ரூ. 5000/–ரூபாய் பிரித்து எடுத்துக்கொண்டு மீதமுள்ள தொகையை சுரேந்தர் என்பரிடமும், நகைகளை செந்தில்குமார் என்பரிடமும் கொடுத்துவிட்டு சென்றுவிட்டதாகவும் அதன் பிறகு 30.04.2015 அன்று சங்கர் என்கிற ஞானசேகர், சௌந்தர்ராஜன், சிவா, கிருஷ்ணாமூர்த்தி ஆகியோர் மேச்சேரி பகுதிக்கு சென்று கொள்ளையடித்தது குறித்து நிலவரம் தெரிந்துகொள்ள திருப்பூரில் இருந்து பஸ் பிடித்து மேச்சேரி சென்றதாகவும் செல்லும் வழியில் சிவா, கிருஷ்ணாமூர்த்தி ஆகியோர்

கருமலைக்கூடல் பகுதியில் படம் பார்ப்பதற்காக இறங்கி கொண்டதாகவும், சங்கர் என்கிற ஞானசேகர், சௌந்தர்ராஜன் ஆகியோர் மேச்சேரிக்கு சென்றதாகவும் அப்போது கொள்ளையடித்தது குறித்து மேச்சேரி போலீசார் விசாரித்து வருவதை தெரிந்து கொண்டதாகவும், அவர்களிடம் இருந்த பணத்தில் மது குடித்துவிட்டதால் திருப்பூர் செல்ல பணம் இல்லாததால் மேச்சேரியில் இருந்து சேலம் செல்லும் பஸ் ஏறி செங்காட்டுர் பிரிவு என்ற பகுதியில் இரவு இறங்கியதாவும் அப்போது மோட்டர் வாகனத்தில் வந்த நபரை வழிமறித்து சௌந்தர்ராஜன் என்பவர் தன்னிடம் உள்ள கத்தியை காட்டி மிரட்டியதாகவும் பயந்துபோய் அந்த நபர் ரூ.850 கொடுத்தாகவும்,

6. அவர் சத்தம் போட்டதால் அருகில் உள்ள புதரில் மறைந்துபின்பு மேச்சேரி பேருந்து நிலையத்திற்கு வந்ததாகவும், அதன் பிறகு மது அருந்திவிட்டு இரவு பேருந்து நிலையத்திலேயே படுத்து தூங்கிவிட்டதாகவும் கூறினார். மறுநாள் காலை திருப்பூர் பஸ் ஏறுவதற்காக SMR பங்க் அருகில் நின்று கொண்டிருந்தபோது போலீசார் கைது செய்துவிட்டதாக தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம்.

7. அதன் பிறகு சுமார் 7.30 மணியளவில் சௌந்தர்ராஜன் என்பர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம். என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015 ம் தேதிய ஞானசேகர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வதுகையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015 ம் தேதிய எதிரி சௌந்தர்ராஜன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7** ஆகும்.

8. மேற்படி நபர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அமிர்ஜோதி காடன் காங்கேயம் ரோடு திருப்பூர் சென்று மதியம் 12 மணி அளவில் சுரேந்தர் என்பவரிடம் விசாரணை மேற்கொண்டு 12.10 மணிளவில் சுரேந்தரை மேச்சேரி போலீசார் கைது செய்தனர். மதியம் 12.15 மணிக்கு சுரேந்தர் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம். என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015 ம் தேதிய எதிரி சுரேந்தர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.8** ஆகும். எதிரி சுரேந்தர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திருப்பூர் அமரஜோதி காடன் எதிரி வீட்டினுள் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.1,82,000/-, நோக்கியோ செல்போன் மாடல் 107, நோக்கியோ செல்போன் மாடல் சி101 ஆகிய வழக்கு சொத்துக்களை எதிரினுடைய தகவலின்பேரில் காவல் ஆய்வாளர் நான் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் அர்த்தணாரி இருவரது முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜர் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.9** ஆகும்.

9. அதன் பிறகு கொடுவாய் தாராபுரம் மெயின்ரோடு அரசு உயர் நிலைப் பள்ளி எதிரில் உள்ள செந்தில்குமார் த.பெ.வெற்றிவேல் என்பரையும் அவரது வீட்டின் முன்பு கொண்டிந்த சுரேஷ்குமார், ரமேஷ்குமார், சாதிக்பாட்ஷா, ஆறுமுகம் ஆகியோரை மதியம் சுமார் 2.15 மணியளவில் மேச்சேரி காவல் ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு கைது செய்தார். மதியம் சுமார் 2.45 மணியளவில் செந்தில்குமார் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம். என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015 ம் தேதிய எதிரி செந்தில்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது

கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.10** ஆகும்.

என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015ம் தேதிய எதிரி செந்தில்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கொடுவாய் அரசினர் மேல்நிலையப்பள்ளி எதிரில் உள்ள அவரது வீட்டில் இருந்து மறைத்து வைத்திருந்த நகைகள் 1. கல்முகப்பு இரட்டை சரம் செயின்–1, 75.22 மி.கி.

2. சாதா வளையல் –2 41.37 மி.கி.

3. டாலர் மற்றும் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 40 மி.கி.

4. மைனர் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 22.50 மி.கி.

5. சாதா நெக்லஸ் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 24.49 மி.கி.

6. மெசின் மைனர் செயின் ஒன்று. அதன் எடை சுமார் 11.73 மி.கி.

7. ஜென்ஸ் கைச்செயின் ஒன்று. அதன் எடை சுமார் 25 மி.கி.

8. SS கல் மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 9 மி.கி.

9. கட்டி மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 6.84 மி.கி.

10. கசை மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 5.9 மி.கி.

11. கல்பதித்த மோதிரம் ஒன்று. அதன் எடை சுமார் 5.20 மி.கி.

12. டிசைன் தோடு ஒரு ஜோடி. அதன் எடை சுமார் 5.42 மி.கி.

13. பவளமாலை கைச்செயின் ஒன்று. அதன் எடை சுமார் 10.46.

14, சாம்சாங் செல்போன் டூயல் சிம் பிரவுன் கலர் ஒன்று. அதன் மாடல் GT–B5722. ஆகிய வழக்கு சொத்துக்களை எதிரினுடைய தகவலின்பேரில் காவல் ஆய்வாளர் நான் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் அர்த்தணாரி இருவரது முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜர் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.11** ஆகும்.

10. மாலை சுமார் 4.30 மணியளவில் ரமேஷ்குமார் த.பெ.மூக்கன் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம். என்னிடம் காட்டப்படும் கடந்த 01.05.2015 ம் தேதிய எதிரி ரமேஷ்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.12** ஆகும். மேற்படி ரமேஷ்குமார் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு கொடுவாய் அரசு உயர் நிலைப்பள்ளி அருகில் நிறுத்தி வைத்திருந்த 1. TN 10 S 5962 பதிவெண் கொண்ட Tata Sumo கார் அதன் சேஸ் நெம்பர் 421058HSZ952057. இஞ்சின் நெம்பர் 497SB28GSZ880656

2. நோக்கியா செல்போன் ஒன்று. அதன மாடல் RM-944.

3. காரில் மறைத்து வைத்திருந் வாதி சாந்தி செல்போன் நோக்கியா, அதன் மாடல் E 72. பிரவுன் கலர்.

4. வாதி சாந்தி செல்போன் நோக்கியா. அதன் மாடல் 302. கருப்பு கலர்.

5. வாதியின் மகன் ஷியாமின் திருமண பதிவு சான்று ஒன்று. எதிரினுடைய தகவலின்பேரில் காவல் ஆய்வாளர் நான் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் அர்த்தணாரி இருவரது முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.13** ஆகும்.

11. மாலை சுமார் 6.00 மணியளவில் ஆறுமுகம் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையொப்பம்மிட்டோம். கடந்த 01.05.2015 ம் தேதிய எதிரி ஆறுமுகம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.14** ஆகும். மேற்படி ஆறுமுகம் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு எடுத்து ஆஜர் செய்த 1, Micro max cell phone -1 அதன் மாடல் X234C 2. Rokea cell phone -1 அதன் மாடல்

R 920. ஆகிய வழக்கு சொத்துக்களை எதிரினுடைய தகவலின்பேரில் காவல் ஆய்வாளர் நான் மற்றும் கிராம நிர்வாக உதவியாளர் அர்த்தணாரி இருவரது முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜர் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.15** ஆகும். எங்கள் முன்னிலையில் தான் சொத்து கைப்பற்றப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**